**சுற்றறிக்கை இலக்கம்: 8/2005/21**

எனது இலக்கம்: M.10/பல/பொது/சுனாமி/2005

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல: 280, பிரதான வீதி,
கொழும்பு 11.
12 ஜூலை 2005.

அனைத்து பிரதேச செயலாளர்கள் / மாவட்டப் பதிவாளர்களுக்கு,

**சுனாமிப் பேரழிவினால் காணாமல் போனவர்களின்**

**மரணங்களைப் பதிவு செய்தல்**

ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடுகள்) சட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அச் சட்டத்தின் முதலாம் பாகத்தில், சுனாமிப் பேரழிவு காரணமாகக் காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

02. இதற்கமைய, அச் சட்டத்தின் 2 மற்றும் 3 ஆம் பிரிவுகளின் கீழ் சுனாமிப் பேரழிவினால் காணாமல் போனவர்களின் மரணங்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை இப்போது நீங்கள் பொறுப்பேற்க முடியும் என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன். அதன்படி, விண்ணப்பங்களைப் பொறுப்பேற்கும் போது பின்வரும் அறிவுறுத்தல்களுக்கமையச் செயற்படவும்:

**I. விண்ணப்பதாரர்:**

- இச்சட்டத்தின் கீழ் மரணப் பதிவுக்காக, மரணமடைந்ததாகக் கருதப்படும் நபரின் நெருங்கிய உறவினர் ஒருவரே விண்ணப்பிக்க வேண்டும்.
- அத்தகைய ஒரு உறவினர் இல்லாத பட்சத்தில், மரணமடைந்ததாகக் கருதப்படும் நபர் பற்றிய தகவல்களை அறிந்த வேறொருவர் விண்ணப்பிக்கலாம்.

**II. விண்ணப்பிக்கும் முறை:**

சட்டத்தின் முதலாம் பாகத்தின் இரண்டாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்திற்கு அமைய, மரணமடைந்ததாகக் கருதப்படும் நபர் வசித்த கிராம உத்தியோகத்தர் பிரிவின் கிராம உத்தியோகத்தரிடம் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இவ்விண்ணப்பத்துடன் முறையாகத் தயாரிக்கப்பட்ட சத்தியக்கடதாசி ஒன்றையும் கிராம உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும். இதற்காகப் பயன்படுத்த வேண்டிய விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்று இச் சுற்றறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்தப் படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்பட்ட எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ள முடியும்.

**III. விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்:**

(அ) கிராம உத்தியோகத்தர் விண்ணப்பத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர், குறித்த மரணச் சான்றிதழை வழங்குவது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் (எதிர்ப்புகள்) இருப்பின், அவற்றை இரண்டு வாரங்களுக்குள் சமர்ப்பிக்குமாறு கோரும் அறிவித்தல் ஒன்றை அவரது அலுவலக அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்த வேண்டும். அந்த இரண்டு வார கால முடிவில், விசாரணை நடத்துவது அவசியம் என அவர் கருதினால், விசாரணையை நடத்திவிட்டு, பிரதேசப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையுடன் தொடர்புடைய ஆவணங்களை அந்தப் பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கும் போது, தனது அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களின் உண்மைத்தன்மையை அவர் சான்றளிக்க வேண்டும்.

(ஆ) சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் மேற்கூறிய அறிக்கையை மேலொப்பமிட்டு (Endorse), பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மண்டல அலுவலகத்திற்குப் பொறுப்பான உதவிப் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். குறித்த உதவிப் பதிவாளர் நாயகம் அப் பத்திரங்கள் தொடர்பாகத் திருப்தியடைந்த பின்னர், அந்த மரணத்தைப் பதிவு செய்வதற்கான கட்டளையை வழங்கி, மரணம் நிகழ்ந்த இடத்திற்குரிய பிரிவின் பிறப்பு மற்றும் இறப்புப் பதிவுப் பதிவாளருக்கு அனுப்பி வைக்க வேண்டும். பதிவாளர் அந்த மரணத்தை முறையாகப் பதிவு செய்த பின்னர், விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரரின் பெயருக்கு இலவசமாக வழங்கப்பட வேண்டிய மரணச் சான்றிதழைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**<u>வலய அலுவலகங்களின் முகவரிகள் பின்வருமாறு:</u>**

01. உதவிப் பதிவாளர் நாயகம்,<br>தெற்கு வலய அலுவலகம்<br>பதிவாளர் நாயகம் திணைக்களம்,<br>கோட்டை,<br>காலி.

02. உதவிப் பதிவாளர் நாயகம்,<br>மேல் மாகாண வலய அலுவலகம்,<br>பதிவாளர் நாயகம் திணைக்களம்,<br>மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை,<br>கொழும்பு 07.

03. உதவிப் பதிவாளர் நாயகம்,
வடமேல் மற்றும் வடமத்திய வலய அலுவலகம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம்
வத்கிமி வீதி,
குருநாகல்.

04. உதவிப் பதிவாளர் நாயகம்,
ஊவா மற்றும் சப்ரகமுவ வலய அலுவலகம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம்
புதிய நகரம்,
இரத்தினபுரி.

05. உதவிப் பதிவாளர் நாயகம்,
வடக்கு மற்றும் கிழக்கு வலய அலுவலகம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம்
மட்டக்களப்பு / யாழ்ப்பாணம்.

06. உதவிப் பதிவாளர் நாயகம்,
மத்திய மாகாண வலய அலுவலகம்,
பதிவாளர் நாயகம் திணைக்களம்
கண்டி.

03. இது தொடர்பாக ஏதேனும் விளக்கம் தேவைப்படின் உதவிப் பதிவாளர் நாயகம் திரு. டி.எம்.டி.பி.கே. ஜயசேன அவர்களைத் தொடர்பு கொள்ளவும். அவரது தொலைபேசி இலக்கம்: 2393077.

எல்.கே. ரத்னசிறி
பதிவாளர் நாயகம்

**பிரதிகள் -**

1. செயலாளர், பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு. - தகவலுக்காக
2. செயலாளர், நீதி மற்றும் நீதி சீர்திருத்த அமைச்சு - தகவலுக்காக
3. அனைத்து மாவட்ட செயலாளர்கள்/ மேலதிக பதிவாளர் நாயகங்கள் - தகவலுக்காக
4. அனைத்து வலய உதவி பதிவாளர் நாயகங்கள் - மேலதிக நடவடிக்கைகளுக்காக
5. அனைத்து காணிப் பதிவாளர்கள் மற்றும் மேலதிக மாவட்ட பதிவாளர்கள் - தகவலுக்காக
6. பிறப்பு, , இறப்பு பதிவாளர்கள் - மேலதிக நடவடிக்கைகளுக்காக

**2005 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சுனாமி (விசேட ஏற்பாடு) சட்டம்**

**காணாமற்போன நபர் ஒருவரின் இறப்புச் சான்றிதழொன்றின் வழங்குகைக்கான விண்ணப்பம்.**

கிராம அலுவலருக்கு: ....................................................................

1. காணாமற்போன நபரின் முழுப்பெயர் -
2. பால் -
3. இனம் -
4. வயது -
5. இறந்த திகதி -
6. தெரிந்த கடைசி வதிவிட முகவரி -
7. நிரந்தர வதிவிட முகவரி -
8. பதவி அல்லது தொழில் -
9. விண்ணப்பதாரரின் முழுப்பெயர் -
10. விண்ணப்பதாரரின் வதிவிடமும் தொலைபேசி இலக்கமும் -
11. விண்ணப்பதாரரின் தொழில்/வாழ்க்கைத்தொழில் -
12. விண்ணப்பதாரரின் தொழிலிடமும் தொலைபேசி இலக்கமும் -
13. காணாமற்போன நபருக்கும் விண்ணப்பதாரருக்குமுள்ள உறவு -

........................................................................................................................ என்னும் முகவரியைச் சேர்ந்த ஆகிய நான் ................................................................................................ (காணாமற்போன நபரின் பெயர்) ஆறு மாதத்திற்கு மேலாக காணப்படாதுள்ளார் எனவும் சொல்லப்பட்ட ...................................................................... என்பவர் இறந்து விட்டார் எனவும் ......................................................................................... சுனாமியினாலேயே இறப்பு நிகழ்ந்தது எனவும் நிச்சயமாக நம்புகிறேன் எனவும் இத்தால் நான் கூறுகிறேன்.

ஆகவே, இறப்பானது (110 ஆம் அத்தியாயமான) பிறப்புகள், இறப்புக்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட வேண்டுமெனவும் அத்தகைய நபர் தொடர்பிலான இறப்புச் சான்றிதழொன்று எனக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் நான் வேண்டுகிறேன்.

திகதி: ................................ ....................................................................

விண்ணப்பகாரரின் கையொப்பம்